முகம்
(மாத இதழ்)

திருவள்ளுவர் ஆண்டு 2055
புரட்டாசி - 15 (01.10.2024)

நிறுவனர்
**மாமணி**

ஆசிரியர்:
**முனைவர் இளமாறன்**
94442 64111
044 - 4557 9006

தனி இதழ் ரூ.15/-
ஆண்டுக் கட்டணம் ரூ.150/-
10 ஆண்டுக்கு ரூ.1000/-

விளம்பரக் கட்டணம்
முழுப்பக்கம்

உள்ளே ரூ.1000/-
வெளியே ரூ.2000/-

**முகம்** என்னும் பெயரில்
காசோலை அனுப்பலாம்

**முகம் தொடர்பு முகவரி:**
எண்.26, பாரதிதாசன் தெரு, திருநகர்,
சாபர்கான்பேட்டை, சென்னை- 600 083.

மின்னஞ்சல்: mugam.idhazh@gmail.com
இணையதளம்: http://www.mugamidhazh.net.in



மெய்ப்பொருள் காண்பது அறிவு
-குறள்

# நியாயமற்றது!

**த**மிழகத்தில் பா.ச.க.வுக்குப் போதிய வாக்குகள் கிடைக்க வில்லை என்பதால் ஒன்றிய அரசு மாற்றாந் தாய் மனப்பான்மையில் தமிழகத்தை எல்லாத் துறைகளிலும் வஞ்சித்து வருகின்றது. தமிழக அரசின் திட்டங்களுக்கு முட்டுக் கட்டை போட்டு வருகிறது. இத்தனைக்கும், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய அரசிடம் பகைமை பாராட்டாமல் பெருந் தன்மையாக நடந்து கொள்வதை நாடு அறியும்.

சென்னை மெட்ரோ தொடர் வண்டி சென்னை வாழ் மக்களுக்குப் பெரும் பயன் அளித்து வருகின்றது. அதன் இரண்டாம் கட்டத் திட்டத்திற்குக் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்யாமல் தவிர்த்து வருகின்றது. இதைப் பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு, ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் தோகன் சாஹு எழுத்துப் பூர்வமாக பதில் அளித்துள்ளார்.

அதில், '118.9 கி.மீ. நீளம் கொண்ட சென்னை மெட்ரோ தொடர்வண்டி இரண்டாம் கட்டத் திட்டத்தை ரூ.63,246 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த தமிழக

அரசு முன்மொழிந்துள்ளது. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆழமான ஆய்வுகள், வளங்களின் இருப்புகள் போன்றவற்றின் அடிப்படையில்தான் ஒப்பதல் தர முடியும். தற்போது இந்தத் திட்டம் மாநிலத் திட்டமாக நடைபெற்று வருகின்றது. எனவே, இதன் செயலாக்கத்திற்கான செலவினத் தைத் தமிழக அரசுதான் ஏற்க வேண்டும்' என்று கைவிரித் துள்ளார். ஆக, இத்திட்டத்திற்கு ஒன்றிய அரசு இன்னும் ஒப்புதல் தராமல் ஒதுக்கி வைத்துள்ளது எனத் தெரிய வருகிறது.

கடந்த இரண்டாண்டுகளாக இந்த இரண்டாம் கட்டப் பணிக்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்காததால், தமிழக மக்களின் நலன் கருதி தமிழக அரசே இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றது. இதையே காரணம் காட்டி, 'இது மாநிலத் திட்டமாக நடக்கிறது' என்று கூறி நிதி ஒதுக்கத் தவிர்ப்பது நியாயமற்றது. மக்கள் நெருக்கம், பொருளாதார அடிப்படையிலான தேவைகள், வேலை வாய்ப்பு இவை அனைத்தும் சென்னை யைச் சுற்றி நடக்கிறது எனத் தெரிந்திருந்தும் ஒன்றிய அரசு முரட்டுப் பிடிவாதம் பிடிக்கிறது.

தேர்தல் நேரத்தில் மோடி பலமுறை தமிழ்நாட்டுக்கு வந்தும், வாக்குகள் பெறமுடியவில்லை என்ற எரிச்சலில், தமிழ்நாட்டு நலத் திட்டங்களுக்கு ஒப்புதல் தராமல் இருப்பதும், நிதி ஒதுக்கீடு செய்யாமல் தவிர்ப்பதும் வரலாற்றுப் பிழை. ஒன்றிய அரசின் செயல்பாடு களை உலகம் உற்று நோக்கிக் கொண்டுதான் இருக்கின்றது. அயல்நாடுகளில் வாழும் தமிழர் களும் இதைக் கவனித்துக் கொண்டுதான் இருக்கின்றனர்.

தமிழக மக்களுக்கு நல்லதைச் செய்து வாக்குகள் பெற முயற்சி செய்ய வேண்டுமே தவிர, சிறுபிள்ளைத் தனமாக ஒன்றிய அரசு நடப்பது முதிர்ந்த அரசியலுக் கான அடையாளமல்ல.

இந்தியாவிலேயே தமிழகம் தான் சரக்கு மற்றும் சேவை வரியை அதிகமாக ஒன்றியத்திற்கு அளிக்கிறது. மாநில அரசைப் பழிவாங்குவதாக நினைத்துக் கொண்டு, தமிழக மக்களின் வரிப் பணத்திலிருந்து சிறு தொகை கூட வழங்காதது ஒன்றிய அரசு தமிழகத்திற்குச் செய்யும் துரோக மாகும்.

தில்லி, பெங்களூரு, பாட்னா, மும்பை, ஆமதாபாத், கான்பூர், ஆக்ரா ஆகிய நகரங்களின் மெட்ரோ தொடர்வண்டித் திட்டங் களுக்கு ஒன்றிய அரசு அதிகமாக நிதி ஒதுக்கித் தருகிறது. ஆனால் தமிழ்நாட்டைப் புறக்கணிக்கிறது. புறக்கணிப்போர் புறக்கணிக்கப் படுவர் என்பதுதான் நியதி.

**- ஆசிரியர் 26.9.2024**